[1970 ஏப்ரல் 1

நெமிலி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலேயம்.

*622 வினு.—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1961-ம் ஆண்டில், அரக்கோணம் தாலுக்கா, நெமிலி பஞ்சாயத்து யூனியனில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று அமைப்பதற்கென பொதுமக்கள் ரூ. 7,500 கொடுத்தது, இடமும் கொடுத்துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான கட்டடம் கட்டி முடிந்துவிட்டதா ?

(உ) இல்லை எனில், காரணமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) & (உ) : நெமிலி பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலேயம் கட்டுவதற்கு மக்கள் உரிய தொகையாக ரூ. 7,500, 1961-ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப் பட்டது. ஆனல் மேற்படி நிலேயம் கட்டுவதற்கான நிலத்தை இதுவரை அரசிற்கு வழங்காததால் சுகாதார குடும்ப நல இயக்குநரால் மேற்படி நிலேயத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் தயாரிக்கப்படவில்லே.

திரு. நா. வீராசாமி : நெமிலி பஞ்சாயத்தில் நிலம் கொடுக்கப்பட வில்லே. எனவே, அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டிக் கொடுக்க அனுமதி இல்லேயென்று சொன்னர்கள். பொதுவாக தமிழ் நாட்டில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லாம் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இருக்கக் காரணம் சைனக்காரன் படையெடுத்தபோது மத்திய அரசாங்கம் உதவியை நிறுத்திவிட்டதுதான். இப்போது மீண்டும் மத்திய அரசை அணுகி அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று தமிழகத்தில் இருக்கும் எல்லா பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கும் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மானியக் கோரிக்கை விவாதத்தின் போதே சொன்னேன். 121 ஆரம்ப சுகாதார நிலேயங்கள் சொந்தக் கட்டடங்களேப் பெற்றிருக்கின்றன. 1962 முதல் 1966 வரை நெருக்கடி காரணமாகக் கட்டடங்கள் கட்டுவது நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு 30 ஆரம்ப சுகாதார நிலேயங்களுக்குக் கட்டடங்கள் கட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எங்கே இடம் ஐந்து ஏக்கர் அளவுக்கு இருந்தாலும் பத்தாயிரம் ரூபாய் வரை பணமும் கொடுக்கிருர்கள். இதிலே மேலும் சங்கடம் எதுவும் இல்லாமல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகின்றன.

Reservation of seats in colleges

*623 Q.—THIRU K VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state, whether the Government proposes to retain and observe the rules of reservation of certain percentage of seats for Scheduled Castes and Backward Classes in the matter of admission of students in Government Colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கே. விநயகம் : மெடிகல் கல்லூரிகளேப் போலவே டெக்னிகல் கல்லூரிகளிலும் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையையும், மாவட்டத்திற்கு இவ்வளவு பர்சன்டேஜ் என்ற அடிப்படையையும் அனுசரிக்கக்கூடாது என்று ஹைகோர்ட்டில் தீர்ப்பு வந்திருக்கிறது. அதற்கும் இதற்கும் முரண்பாடாக இருக்கிறதே, இதை எப்படித்